# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## தேசிய நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபை (திருத்தம்)

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர்வழங்கல் வடிகால் சேவைகள் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் அவர்களால்
2026 யூலை மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2026 மாச்சு மாதம் 13 ஆம் திகதியன்று வர்த்தமானியில்
வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

**[70 ஆம் சட்டமூலம்]**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 86.50 தபாற் செலவு : ரூபா 150.00

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2:*** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு பதிலீடுசெய்வதன்மூலம் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது 64 ஆம் பிரிவின்கீழ் சபைக்கு மாற்றப்பட்ட கைத்தொழில் பெருந்தோட்டம், கைத்தொழில் பூங்கா அல்லது சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பின் ஏதேனும் நீர்வழங்கல் அல்லது சாக்கடைச் சேவைப் பொறுப்புமுயற்சியைக் கையேற்று கொண்டு நடாத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்குமாகும்.

***வாசகம் 3:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது சபையின் குறிக்கோள்களை எய்துவதற்கு அதன் தத்துவங்களை அதிகரிப்பதற்குமாகும்.

***வாசகம் 4:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது 19 ஆம் பிரிவின்கீழ் சபையின் தத்துவங்களைப் பிரயோகிப்பதிலிருந்து பிணக்கொன்று எழுகின்றபோது கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றுக்கு ஏற்பாடுசெய்வதற்குமாகும்.

***வாசகம் 5:*** இவ்வாசகம், சபையானது பரிகரிப்பு பொறித்தொகுதிகளையும் மற்றும் குழாய் வழிகளையும் நிர்மாணிப்பதனையும் ஏற்பாடு செய்வதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 6:*** இவ்வாசகம், சபையின் பொது முகாமையாளர் எந்த ஏதுக்களின்மீது நீர் வழங்கலை தொடுப்பறுக்கலாமோ அல்லது எவையேனும் கருவிகளை அகற்றலாமோ அந்த ஏதுக்களைக் குறிப்பிடுவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 7:*** இவ்வாசகம், (1) ஆம் உட்பிரிவின்கீழான கடமைகளை நிறைவேற்றுகையில் சபையின் பொது முகாமையாளர் அல்லது பொது முகாமையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் பொலிஸ் அலுவலருடன் சேர்ந்து செல்வதற்கு ஏற்பாடுசெய்வதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 8:*** இவ்வாசகம், சபையின் பொது முகாமையாளரின் சான்றிதழை வருமதியாகவுள்ள தொகைகளின் முதற்றோற்றளவிலான சான்றாக ஏற்றங்கீகரிப்பதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 9:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் III ஐத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பாகத்தின் சட்டப்பயனானது பொதுத் திருத்தமொன்றாக கைத்தொழில் பெருந்தோட்டங்கள், கைத்தொழில் பூங்காக்கள் மற்றும் சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புக்களை உள்ளடக்குவதற்குமாகும்.

***வாசகம் 10:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 57அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதுடன் புதிய பிரிவின் சட்டப்பயனானது கைத்தொழில் பெருந்தோட்டமொன்றின், கைத்தொழில் பூங்காவின் அல்லது சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பொன்றின் நீர்வழங்கல் மற்றும் சாக்கடைச் சேவைப்பொறுப்பு முயற்சியை ஏற்பாடு செய்வதற்குமாகும்.

***வாசகம் 11:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 83அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதுடன் புதிய பிரிவின் சட்டப்பயனானது சபையின் ஊழியர்களுக்கான காப்புறுதி ஒப்பந்தங்களை ஏற்பாடு செய்வதற்குமாகும்.

***வாசகம் 12:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IV ஐத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பாகத்தின் சட்டப்பயனானது பொதுத் திருத்தமொன்றாக கைத்தொழில் பெருந்தோட்டங்கள், கைத்தொழில் பூங்காக்கள் மற்றும் சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புக்களை உள்ளடக்குவதற்குமாகும்.

***வாசகம் 13:*** இவ்வாசகம், மானி ஒன்றினூடாக நீர் வழங்குகையின் ஓட்டத்தை நேர் மாற்றுவதனை தவறாக ஆக்குவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 84எ என்னும் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 14:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 85அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதுடன் புதிய பிரிவின் சட்டப்பயனானது சாக்கடைச் சேவைகளுக்கான விதிப்பனவுகளை நிர்ணயிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்குமாகும்.

***வாசகம் 15:*** இவ்வாசகம், சபையினால் அனுப்பப்பட்ட நீர் வழங்கல் அல்லது சாக்கடைச் சேவை விதிப்பனவு தொடர்பான கோரிக்கையொன்றை அனுப்பும் முறைகளைக் குறித்துரைப்பதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 16:*** இவ்வாசகம், அறிவித்தலொன்றை அனுப்பும் முறைகளைக் குறித்துரைப்பதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 17:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கமுடியுமான மேலதிக கருமங்களை ஏற்பாடுசெய்வதற்குமாகும்.

***வாசகம் 18:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 97ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றதுடன் புதிய பிரிவின் சட்டப்பயனானது வீணாக்கப்பட்ட, தவறாகப் பயன்படுத்தப்பட்ட அல்லது முறையற்றவகையில் பயன்படுத்தப்பட்ட நீரின் பெறுமதியை துரிதமாக அறவிடுதல் தொடர்பான நிலையான மற்றும் நடவடிக்கைமுறைசார் சட்டத்தை ஏற்பாடுசெய்வதற்குமாகும்.

***வாசகம் 19:*** இவ்வாசகம், புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலம் 100 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

ச.வ.-ஒ. 13/2022

## 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தேசிய நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர்வழங்கல், வடிகால் சேவைகள் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:- 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சட்டத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்

"(ஈ) 64 ஆம் பிரிவின்கீழ் தன்னிச்சையான மாற்றற் கட்டளையொன்றின் மூலம் அல்லது வலுக்கட்டாய மாற்றற் கட்டளை யொன்றின்மூலம் சபைக்கு மாற்றப்பட்ட ஏதேனும் உள்ளூரதிகாரசபையின், கைத்தொழில் பெருந்தோட்டத்தின், கைத்தொழில் பூங்காவின் அல்லது சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பின் ஏதேனும் நீர்வழங்கல் அல்லது சாக்கடைச்சேவைப் பொறுப்புமுயற்சியைக் கையேற்றலும் கொண்டுநடாத்தலும்;".

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அதன் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(அஅ) மேற்பரப்பு மற்றும் நிலக்கீழ் நீர் வளங்களிலிருந்து நீரைப் பெற்றுக் கொள்வதற்கு எவரேனும் ஆளுடன் உடன்படிக்கைகளை செய்து கொள்ளல்;";

(2) அதன் (இ) என்னும் பந்தியில், "கொள்ளல், வைத்திருத்தல்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "கொள்ளல், கொள்வனவு செய்தல், வைத்திருத்தல்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) அதன் (ஒ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஒஅ) ஏதேனும் அரசாங்க திணைக்களத்தின் அல்லது அமைச்சரினால் அங்கீகரிக்கப் பட்ட ஆள் அல்லது ஏதேனும் குழுவின் ஒத்தாசையுடன் நீர்வழங்கல் மற்றும் சாக்கடைச் சேவைகளை வழங்குவதற்காக, அபிவிருத்தி செய்வதற்காக மற்றும் பேணுவதற்காக மேற்பரப்பு மற்றும் நிலக்கீழ் நீர்வள அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுதல்;

(ஒஆ) அமைச்சரின் அங்கீகாரத்துடன், சபையின் அபிப்பிராயத்தில் சபையின் அக்கறைகளை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் மேம்படுத்தக்கூடிய அல்லது அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு உகந்தனவாகவிருக்கக்கூடிய 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் ஏதேனும் துணைநிலை ஒழுங்கமைப்பை அல்லது ஒரு மூலோபாயம்சார் தொழில் அலகொன்றை தாபித்துப் பேணுதல்;

(ஒஇ) அமைச்சரின் எழுத்திலான பணிப்புக் களுடன், ஒன்றில் நேரடியாக அல்லது இப்பிரிவின் (ஒஆ) என்னும் பந்தியின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் துணைநிலை ஒழுங்கமைப்பினூடாக அல்லது மூலோபாயம்சார் தொழில் அலகினூடாக அல்லது மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவுடன் அல்லது இலங்கையினுள்ளே அல்லது

இலங்கைக்கு வெளியேயுள்ள சபையின் குறிக்கோள்களுக்கு ஒத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள வேறு ஏதேனும் நிறுவனத்துடன் இணைந்து பின்வருவனவற்றைச் செய்தல் –

(i) நீர்வழங்கல் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவம் தொடர்பாக ஆலோசனை மற்றும் மதியுரைச் சேவைகள், பயிற்சி மற்றும் அறிவுப் பகிர்வு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றை வழங்குதல்;

(ii) நீர்வழங்கல் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவம் தொடர்பாக பயிற்சி வசதிகள், நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை வழங்குதல்;

(iii) நீர்வழங்கல் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவம் தொடர்பாக திப்புளோமா கற்கைநெறிகளை நடாத்துதல் மற்றும் தோதானவிடத்து திப்புளோமாக்களை அளித்தல்; அத்துடன்

(iv) கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் மாநாடுகளை நடாத்துதல்;

(ஔ) சமுதாய அடிப்படையிலான நீர் வழங்கலின் நிலைபெறுதகு தன்மையையும் சீராக்கப்பட்ட சேவை வழங்குகையையும் மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கு ஏதேனும் அரசாங்க திணைக்களத்துடன் அல்லது அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவனத்துடன் அத்தகைய எல்லா உடன்படிக்கைகளையும் செய்துகொள்ளல் மற்றும் அவற்றைப் புரிதல்;

(ஔஉ) ஏதேனும் அரசாங்க அல்லது தனியார் உருவகத்துக்கு அல்லது எவரேனும் ஆளுக்கு ஆய்வுகூட சேவைகளை வழங்குதல் மற்றும் நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரின் அங்கீகாரத்துடன், சபையினால் காலத்துக்குக்காலம் நிர்ணயிக்கப்படக் கூடியவாறான அத்தகைய விதிப் பனவுகளுக்கிணங்க அத்தகைய சேவை களுக்கான கட்டணங்களை விதித்தல்;

(ஔஊ) ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நாணயத்தில் வங்கிக் கணக்குகளைத் திறத்தல் மற்றும் அவற்றைப் பேணுதல்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை அதன் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அதன் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) ஓராம் உட்பிரிவின்கீழ் முடிபொன்றைச் செய்வதற்கு முன்னர், அமைச்சர், சபைக்கும் 19 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அரசாங்க திணைக்களத்துக்கும் அல்லது குழுவுக்கும் கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றை வழங்குதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு, "தொட்டிகளை, கட்டுக்கால்வாய்களை அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தொட்டிகளை, கட்டுக்கால்வாய்களை, பரிகரிப்பு பொறித் தொகுதிகளை, குழாய் வழிகளை அல்லது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை அதன் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், "ஊறுபாடு தொடர்பில் அவரிடமிருந்து நட்டஈட்டினை அறவிடுவதற்குச் சபைக்குள்ள உரிமைக்குப் பங்கமின்றியும், வீணாக்கப்பட்ட, தவறாகப் பயன்படுத்தப்பட்ட அல்லது முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் நீரின் பெறுமதியை அறவிடுவதற்குச் சபைக்குள்ள உரிமைக்குப் பங்கமின்றியும், அத்தகைய தவறொவ்வொன்றுக்காகவும் நீதிவா னொருவர் முன்னரான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணத்திற்கு அவர் ஆளாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "சேதம் தொடர்பில் அவரிடமிருந்து சேதவீடுகளை அறவிடுவதற்குச் சபைக்குள்ள உரிமைக்குப் பங்கமின்றியும், சபையின் பொதுமுகாமையாளரின் சம்மதமின்றி ஒரு குழாய் அல்லது கருவியை ஒரு கருவியொன்றுடன் அல்லது வேறு குழாயுடன் பொருத்துவதன்மூலம் வீணாக்கப்பட்ட, தவறாகப் பயன்படுத்தப்பட்ட அல்லது முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் நீரின் பெறுமதியை அறவிடுவதற்குச் சபைக்குள்ள உரிமைக்குப் பங்கமின்றியும், அத்தகைய தவறொவ்வொன்றுக்காகவும் நீதிவா னொருவர்முன்னரான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றிற்கு அவர் ஆளாதல் வேண்டும். பொது முகாமையாளர் அல்லது அதற்கென அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் நீர் வழங்கலை தொடுப்பறுக்கலாம் அல்லது பொது முகாமையாளரின் சம்மதமின்றி பொருத்தப்பட்ட அத்தகைய ஏதேனும் குழாய் அல்லது கருவி அகற்றப்படுவதனைச் செய்விக்கலாம்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அதன் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து, அப்பிரிவின் (2) ஆம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளாக இலக்கமிடப்படவேண்டிய பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, சபையின் ஆதனத்துக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் சேதம் தொடர் பிலான சேதவீடுகளின் தொகை மற்றும் வீணாக்கப்பட்ட, தவறாகப் பயன்படுத்தப்பட்ட அல்லது முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் நீரின் பெறுமதியைக் குறிப்பிட்டு பொது முகாமையாளரினால் அல்லது பொது முகாமையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் தயாரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்ட ஒரு சான்றிதழ் வருமதியா கவுள்ள தொகைகளின் முதற்தோற்றளவிலான சான்றாகவிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழான ஏதேனும் குற்றவழக்கில் நீதிவான் நீதிமன்றத்தில் விடயத்துக்கேற்ப பொதுமுகாமை யாளரினால் அல்லது பொதுமுகாமையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் அத்தகைய சான்றிதழ் கோப்பிடப்படுவதன் மேல், வருமதியாகவுள்ளதாக காட்டப்பட்ட தொகையை அறவிடுவதற்கான மேலதிக வழக்கு நடவடிக்கைகள் அத்தகைய ஆளுக்கெதிராக ஏன் எடுக்கப்படுதலாகாது எனக் காரணம் காட்டுவதற்கான வாய்ப்பொன்றை அத்தகைய ஆளுக்கு நீதிவான் அளித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆள் போதிய காரணத்தைக் காட்டியிராதவிடத்து, வருமதியாகவுள்ளதாக காட்டப்பட்ட தொகை அல்லது ஏதேனும் குறைவான தொகை நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப் பணமொன்றாக அறவிடப்படுதலும் வேண்டும்; அத்துடன் அவ்வாறு அறவிடப்பட்ட தொகை சபையின் பொது ஒதுக்கு நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(1அ) அத்தகைய பொது முகாமையாளர் அல்லது பொது முகாமையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கடமைகளை நிறைவேற்றுகையில் ஏதேனும் முட்டுக்கட்டையை அஞ்சுவதற்கான நியாயமான காரணத்தைக் கொண்டுள்ளவிடத்து, பொலிசு அலுவலர் ஒருவருடன் சேர்ந்து அத்தகைய காணியினுள் அல்லது வளவுகளினுள் நுழையலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவை, அதன் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், "அத்துடன் இறுதியாகக் கூறப்பட்ட அத்தகைய வேறு (ஒரு நாளுக்கு மேற்படத்) தொடருமாயின் அவ்வாறு தொடருகின்ற ஒவ்வொரு நாளுக்கும் ஐநூறு ரூபா மேலதிகக் குற்றப்பணத்திற்கும் அத்தகைய ஆள் ஒவ்வொருவரும் ஆளாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்துடன் சபையின் ஆதனத்துக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் சேதம் அல்லது நீர்வேலைகளுக்குச் சொந்தமான ஏதேனும் நீரை அசுத்தமாக்குதல் தொடர்பிலான சேதவீடுகளை அத்தகைய ஆளிடமிருந்து அறவிடுவதற்கான சபையின் உரிமைக்குப் பங்கமின்றி இறுதியாகக் கூறப்பட்ட அத்தகைய தவறு (ஒரு நாளுக்கு மேற்படத்) தொடருமாயின் அவ்வாறு தொடருகின்ற ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபா மேலதிகக் குற்றப்பணத்திற்கும் அத்தகைய ஆள் ஒவ்வொருவரும் ஆளாதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அதன் மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, சபையின் ஆதனத்துக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் ஊறு அல்லது நீர் வேலைகளுக்குச் சொந்தமான ஏதேனும் நீரை அசுத்தமாக்குதல் தொடர்பான சேதவீடுகளின் தொகையை குறிப்பிட்டு பொது முகாமையாளரினால் அல்லது பொது முகாமையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் தயாரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்ட சான்றிதழொன்று வருமதியாகவுள்ள தொகைகளின் முதற்தோற்றளவிலான சான்றாகவிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழான ஏதேனும் குற்றவழக்கில் நீதிவான் நீதிமன்றத்தில் விடயத்துக்கேற்ப பொதுமுகாமையாளரினால் அல்லது பொதுமுகாமையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் அத்தகைய சான்றிதழ் கோப்பிடப்படுவதன்மேல், நீதிவான், வருமதியாக காட்டப்பட்ட தொகையை அறவிடுவதற்கான மேலதிக வழக்கு நடவடிக்கைகள் அத்தகைய ஆளுக்கு எதிராக ஏன் எடுக்கப்படுதலாகாது எனக் காரணம் காட்டுவதற்கான வாய்ப்பொன்றை அத்தகைய ஆளுக்கு அளித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆள் போதிய காரணத்தைக் காட்டியிராதவிடத்து, வருமதியாகக் காட்டப்பட்ட தொகை அல்லது அதனைவிட ஏதேனும் குறைந்த தொகை நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாக அறவிடப்படுதலும் வேண்டும்; அத்துடன் அவ்வாறு அறவிடப்பட்ட தொகை சபையின் பொது ஒதுக்கு நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் III இற்கான பொதுவான திருத்தம்

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் III, அப்பாகத்தில் "உள்ளூரதிகாரசபை" அல்லது "அதிகாரசபை" என்னும் சொல் அல்லது சொற்கள் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம், "உள்ளூரதிகாரசபை, கைத்தொழில் பெருந் தோட்டம் அல்லது கைத்தொழில் பூங்கா அல்லது ஒரு சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

“கைத்தொழில் பெருந்தோட்ட மொன்றின் நீர் வழங்கல் மற்றும் சாக்கடைச் சேவைப் பொறுப்பு முயற்சி முதலியன

**10.** பின்வரும் புதிய பிரிவு, முதன்மைச் சட்டவாக்கத்தின் 57 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப் படுகின்றதுடன் அச்சட்டவாக்கத்தின் 57அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:-

முதன்மைச் சட்டவாக்கத்தில் 57அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**“57அ.** இச்சட்டத்தின் பாகம் III இன் ஏற்பாடுகள் கைத்தொழில் பெருந்தோட்ட மொன்றின், கைத்தொழில் பூங்காவின் அல்லது சமுதாய அடிப் படையிலான ஒழுங்கமைப் பொன்றின் ஏதேனும் நீர்வழங்கல் மற்றும் சாக்கடைச் சேவைப் பொறுப்பு முயற்சியை சபைக்கு மாற்றுதலுக்கும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்:

ஆயின் -

(அ) கைத்தொழில் பெருந்தோட்ட மொன்றின் அல்லது கைத்தொழில் பூங்காவின் நீர்வழங்கல் மற்றும் சாக்கடைச் சேவைப் பொறுப்பொன்றின் விடயத்தில், அப்பாகத்தில் “உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக வுள்ள அமைச்சர்” என்னும் சொற்கள் எங்கெல்லாம் காணப் படுகின்றதோ அங்கெல்லாம் அச்சொற்கள், விடயத்துக்கேற்ப “அரசியலமைப்பின் உறுப்புரை 44 அல்லது 45 இன்கீழ் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச்சபை என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர்” அல்லது

"அரசியலமைப்பின் உறுப்புரை 44 அல்லது 45 இன்கீழ் கைத்தொழில்கள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர்" என்பதற்கான குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருளமைத்துக் கொள்ளப் படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சமுதாய அடிப்படை யிலான ஒழுங்கமைப் பொன்றின் நீர் வழங்கல் அல்லது சாக்கடைச் சேவைப் பொறுப்பு முயற்சியொன்றின் விடயத்தில், அப் பாகத்தில் "உள்ளூராட்சி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர்" என்னும் சொற்கள் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் அச்சொற்கள், "அரசியலமைப்பின் உறுப்புரை 44 அல்லது 45 இன்கீழ் சமுதாய அடிப்படையிலான நீர் வழங்கல் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர்" என்பதற்கான குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருளமைத்துக் கொள்ளப் படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 83அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**11.** பின்வரும் புதிய பிரிவு, முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அச்சட்டவாக்கத்தின் 83அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:-

"காப்புறுதி ஒப்பந்தங்கள்

**"83அ.** (1) சபையானது, நிரந்தரமாக இயலாமைக்குட்படுகின்ற அல்லது பகுதியளவில் இயலாமைக்குட்படுகின்ற அல்லது தற்காலிகமாக உடற்றகுதி யீனத்துக்குட்படுகின்ற எவரேனும் ஊழியருக்கு அல்லது எவரேனும் ஊழியர்

இறக்கின்ற பட்சத்தில் அவரது சட்ட மரபுரிமையாளர்களுக்கு, விடயத்துக்கேற்ப அத்தகைய இயலாமை, உடற்றகுதியீனம் அல்லது இறப்பு -

(அ) கடமையில் இருக்கையில் அத்தகைய ஊழியரினால் அடையப்பட்ட; அல்லது

(ஆ) அத்தகைய ஊழியரினால் –

(i) அவரது வதிவிடத்திலிருந்து அவரது வேலைத்தலத்துக்கு கடமைக்கு வருவதற்குப் பயணிக்கையில் அடையப் பட்ட; அல்லது

(ii) கடமையின்பின்னர் அவரது வேலைத்தலத்திலிருந்து அவரது வதிவிடத்துக்கு பயணிக்கையில் அடையப் பட்ட; அல்லது

(இ) கடமையில் இல்லாது இருக்கையில், அத்தகைய ஊழியரின் சாதாரண கடமைகளின் நோக்கெல்லையினுள் உள்ள ஏதேனும் செயலைப் புரிவதில் அவரினால் அடையப்பட்ட; அல்லது

(ஈ) அத்தகைய ஊழியரின் கடமைகளைப் புரிவதிலான ஏதேனும் செயல் அல்லது செயல் நிறைவேற்றத்தின் விளைவாக அவரால் அடையப்பட்ட; அல்லது

(உ) அத்தகைய ஊழியரின் கடமைகளை நிறைவேற்றுவதில் அவரால் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கையினால் ஏற்படுத்தப் பட்ட அல்லது அதிலிருந்து எழுகின்ற ஏதேனும் பழிவாங்கற்

செயலின் விளைவாக அவரினால் அடையப்பட்ட,

ஊறொன்றின் காரணமாகவுள்ள ஏதேனும் விடயத்தில் காப்புறுதிக் காப்பீடொன்றை வழங்கும் நோக்கத்துக்காக சபையின் ஊழியர்களைக் காப்புறுதி செய்து காலத்துக்குக்காலம் காப்புறுதி ஒப்பந்தங் களைச் செய்து கொள்ளலாம்.

(2) காப்புறுதிக் கட்டுப் பணமாக சபையினால் செலுத்தப்பட வேண்டிய தொகை மற்றும் காப்புறுதி முறை, காப்புறுதியொன்றுக்கு உரித் தாக் கப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட தகைமைகள் மற்றும் அவற்றுடன் தொடர்பு பட்ட வேறு எல்லாக் கருமங்களும் அதற்கென ஆக்கப்பட்ட விதிகள்மூலம் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஊழியர் ஒருவரின் இயலாமை, உடற்றகுதியீனம் அல்லது இறப்பு தொடர்பில் இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக் கிணங்க வழங்கப்பட்ட ஏதேனும் காப்புறுதிக் காப்பீடு, அத்தகைய இயலாமை, உடற்றகுதியீனம் அல்லது இறப்புக்கு ஏற்புடையற்பாலதான வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அவை தொடர்பில் வழங்கப்படும் ஏதேனும் பணிக்கொடை, நட்டஈடு, படி அல்லது வேறு நன்மைக்கு மேலதிகமாகவிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IV இற்கான பொதுவான திருத்தம்

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் IV, அப்பாகத்தில் "உள்ளூரதிகாரசபை" என்னும் சொல் எங்கெல்லாம் காணப்படுகின்றதோ அங்கெல்லாம் அச்சொல்லுக்குப் பதிலாக "உள்ளூரதிகாரசபை, கைத்தொழில் பெருந்தோட்டம் அல்லது கைத்தொழில் பூங்கா அல்லது சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 84எ என்னும் பிரிவைத் திருத்துதல்

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 84எ என்னும் பிரிவு, “சேதப்படுத்தும் அல்லது வேறு ஏதேனும் முறையில்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “சேதப்படுத்தும், ஓட்டத்தை நேர் மாற்றும் அல்லது வேறு ஏதேனும் முறையில்” என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 85அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**14.** பின்வரும் புதிய பிரிவு, முதன்மைச்சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அச்சட்டவாக்கத்தின் 85அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்:-

“சாக்கடைச் சேவைகளுக்கான விதிப்பனவுகளை நிர்ணயித்தல்

**85அ.** (1) எந்த ஆளின் ஆதனம் சாக்கடைச் சேவைத் தொகுதிக்கு தொடுக்கப்படுகின்றதோ அந்த எவரேனும் ஆளினால் சபைக்கு செலுத் தப்படற்பாலதான சாக்கடைச்சேவை விதிப்பனவுகள், நீரின் மூலத்தைப் பொருட்படுத்தாமல் சாக்கடைச் சேவைத் தொகுதிக்கான மொத்த செலுத்துகைகளை அடிப்படைகளாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சபையானது, ஒரு எடை அடிப்டையிலான அல்லது ஒரு குறிப்பிட்ட திட்ட சாக்கடைச் சேவை விதிப்பனவை அறிமுகப்படுத்தலாம்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவைத் திருத்துதல்

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“(ஆ) ஆளொருவருக்குச் சபையினால் அனுப்பப்பட்ட நீர்வழங்கற்கான விதிப்பனவு அல்லது சாக்கடைச் சேவைக்கான விதிப்பனவு தொடர்பிலான கோரிக்கை ஒன்று பதிவஞ்சல் அல்லது சாதாரண அஞ்சல் மூலம் அனுப்பப்படலாம், நேரடியாக அல்லது எவையேனும் இலத்திரனியல் வழிவகைகள் மூலம் ஒப்படைக்கப்படலாம்.”; அத்துடன்

(2) அப்பிரிவின் (8) ஆம் உட்பிரிவில், "எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்." என்பதிலிருந்து அப்பிரிவின் இறுதி வரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவைத் திருத்துதல்

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 88 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அத்தகைய சேவையை நிறுத்தி வைக்கலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய சேவையை நிறுத்திவைக்கலாம். இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தல் பதிவஞ்சல் அல்லது சாதாரண அஞ்சல் மூலம் அனுப்பப்படலாம், நேரடியாக அல்லது எவையேனும் இலத்திரனியல் வழிவகைகள் மூலம் ஒப்படைக்கப்படலாம்." என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவைத் திருத்துதல்

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 90 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (ஒ) என்னும் பந்தியில், அப்பந்தியின் இறுதியில் காணப்படும் "அத்துடன்" என்னும் சொல்லை நீக்கிவிடுவதன் மூலமும்;

(2) அதன் (ஓ) என்னும் பந்தியில், "கட்டுப்பாடு செய்தல்." என்னும் சொல்லுக்குப் பதிலாக "கட்டுப்பாடு செய்தல்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அதன் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளைச்சேர்ப்பதன் மூலமும்:-

"(ஔ) அவசர அடிப்படையொன்றின் மீது நீர்ச் சேவை அல்லது சாக்கடைச் சேவைத் தொடுப்பு கிடைக்கக்கூடிய தன்மை மற்றும் அவை தொடர்பிலான விதிப்பனவுகளுக்கமைய அவற்றை வழங்குதல்;

(க) நீரியல் ஒதுக்கங்களை அல்லது மேற்பரப்பு மற்றும் நிலக்கீழ் நீர் வளங்களின் உள்வாய்களை

பாதுகாப்பதற்கான ஒதுக்கங்களை வெளிப்படுத்துதலும் அவற்றின் பாதுகாப்புக்காக ஏற்பாடு செய்தலும்;

(ங) கழிவுநீரை பொதுச்சாக்கடைகளுக்கும் பரிகரிப்பு பொறித்தொகுதிகளுக்கும் செலுத்துவதற்கான நியமங்களின் அளவுக்குறிப்பீடு அல்லது கட்டளைக் கற்கள்;

(ச) அத்தகைய நியமங்களுடனும் கட்டளைக் கற்களுடனும் இணங்கி யொழுகுவதற்குத் தவறுகின்ற கழிவு நீர் அத்தகைய சாக்கடை களினுள்ளும் பரிகரிப்பு பொறித்தொகுதி களினுள்ளும் செலுத்தப்படுவதனை தடைசெய்தல் மற்றும் அத்தகைய கழிவுநீரைச் செலுத்துவதன் காரணமாக சபையினால் உறப்பட்ட செலவுகள் மற்றும் சேதவீடுகளை அறிவிடுவதற்கும்;

(ஞ) பன்முகப்படுத்தப்பட்ட கழிவுநீர் பரிகரிப்பு முறைமைகள் (பகபமு) மற்றும் கழிவுப் பொருள் பரிகரிப்பு பொறித்தொகுதிகள் உட்பட தளத்திலான சாக்கடைச் சேவைத் தொகுதிகளை நிர்மாணித்தல்;

(ட) சாக்கடைச் சேவைத்தொகுதிகளை நிர்மாணிப்பதற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய கருவிகளினதும் கொள்கலன் களினதும் அளவு, தன்மை, வலு மற்றும் அவற்றை ஆக்கும் பொருட்கள் உட்பட அத்தகைய நோக்கத்துக்கான நியமங்களும் அளவுக்குறிப்பீடுகளும்;

(ண) நீர் வழங்கல் மற்றும் சாக்கடைச் சேவைகள் தொடர்பாக மதியுரை,

கலந்தாலோசனை மற்றும் நிர்மாணிப்புச் சேவைகள் வடிவத்தில் தொழில்நுட்பச் சேவைகளை வழங்குவதில் ஈடுபடும் ஆட்களுக்கு உரிமளித்தல்; அத்துடன்

(த) சபையினால் பொது, வீட்டு அல்லது கைத்தொழில் நோக்கங்களுக்காக வழங்கப்படும் நீரின் தரத்தைப் பேணுதல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 97ஆ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**18.** பின்வரும் புதிய பிரிவு, முதன்மைச் சட்டவாக்கத்தின் 97அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அச்சட்டவாக்கத்தின் 97ஆ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"வீணாக்கப்பட்ட, தவறாகப் பயன்படுத்தப்பட்ட அல்லது முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் நீரின் பெறுமதியை அறவிடுவதற்கான சபையின் உரிமை

**"97ஆ.**(1) இருபத்தெட்டாம், 30, 32, 33, 34, 84ஊ மற்றும் 84எ என்னும் பிரிவுகளின்கீழ் நீதிவான் நீதிமன்ற மொன்றினால் விதிக்கப்பட்ட ஏதேனும் குற்றப்பணம், வீணாக்கப்பட்ட, தவறாகப் பயன்படுத்தப்பட்ட அல்லது முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் நீரின் பெறுமதியை அறவிடு வதற்கான சபையின் உரிமைக்குப் பங்கமின்றியிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக் காக, வீணாக்கப்பட்ட, தவறாகப் பயன்படுத்தப்பட்ட அல்லது முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் நீரின் பெறுமதியைக் குறிப்பிட்டு பொதுமுகாமையாளரினால் அல்லது பொதுமுகாமையாளரினால் அதிகாரமளிக் கப்பட்ட அலுவலரொருவரினால் கையொப்பமிடப்பட்ட சான்றிதழொன்று, வருமதியாகவுள்ள தொகைகளின் முதற் தோற்றளவிலான சான்றாகவிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழான ஏதேனும் குற்றவழக்கில் நீதிவான்

நீதிமன்றத்தில் விடயத்துக்கேற்ப பொது முகாமையாளரினாலான அல்லது பொதுமுகாமையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவல ரொருவரினாலான அத்தகைய சான்றிதழ் கோப்பிடப்படுவதன்மேல், வருமதியாகவுள்ளதாகக் காட்டப்பட்ட தொகையை அறவிடுவதற்கான மேலதிக வழக்கு நடவடிக்கைகள் அத்தகைய ஆளுக்கெதிராக ஏன் எடுக்கப்படுதலாகாது எனக் காரணம் காட்டுவதற்கான வாய்ப்பொன்றை அத்தகைய ஆளுக்கு நீதிவான் அளித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆள் போதிய காரணத்தைக் காட்டிராதவிடத்து, வருமதியாகக் காட்டப்பட்ட தொகை அல்லது அதனைவிடக் குறைந்த ஏதேனும் தொகை நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றாக அறவிடப்படுதலும் வேண்டும்; அத்துடன் அவ்வாறு அறவிடப்பட்ட தொகை சபையின் பொது ஒதுக்கு நிதியத்துக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவைத் திருத்துதல்

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 100 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) “அதிகார இடப்பரப்பு” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்து வதன்மூலமும்:-

“ “குழு” என்பது, ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவை உள்ளடக்கும்;

“சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பு” என்பது, பாவனையாளர் சமுதாயத்துக்கு நீர்வழங்கல் அல்லது சாக்கடைச் சேவைகளை வழங்குவதில் ஈடுபடுகின்ற பாவனையாளர் சமுதாயத்தைப் பிரதிநிதித் துவப்படுத்தும் ஒரு ஒழுங்கமைப்பு அல்லது ஒரு குழு எனப் பொருள்படும்;

"கைத்தொழில் பெருந்தோட்டம்" என்பது, 1969 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு கைத்தொழில் பெருந்தோட்டம் எனப் பொருள்படும் அல்லது 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கைத்தொழில் மேம்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு கைத்தொழில் பெருந்தோட்டம் எனப் பொருள்படும்;

"கைத்தொழில் பூங்கா" என்பது, 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கைத்தொழில் மேம்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு கைத்தொழில் பூங்கா எனப் பொருள்படும்;";

(2) "உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழு" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத் துப்பின்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

""ஆள்" என்பது, ஒரு இயற்கையான அல்லது ஒரு சட்ட ஆளை உள்ளடக்கும்;"; அத்துடன்

(3) "சாக்கடை அமைப்புக்கள்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத் துப்பின்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

""மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு" என்பது, 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் ஏற்பாடு களின்கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழு எனப் பொருள்படும்;".

**20.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.